**மாகாண கல்வித் திணைக்களம்**
**வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்**

| | | |
|---|---|---|
| **தரம்:** **க.பொ.த சா.தாரம்** | **பாடம்:** **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **October** **3 ஆம் வாரம்** |

**பாடஅலகு**
**இலக்கணம் - இயல்புவழக்கு**

- **மாணவர் செயற்பாடு**
  1. இயல்புவழக்கு, தகுதிவழக்கு என்றால் என்ன என்பதை தேடி அறிந்து எழுதிக்கொள்ளுங்கள்
  2. இயல்புவழக்கின் வகைகளையும், தகுதி வழக்கின் வகைகளையும் பட்டியல் படுத்துங்கள்.
  3. அவை ஒவ்வொன்றிற்குமாக விளக்கத்தினை தேடிப்பெற்று எழுதுங்கள்.
  4. அவற்றிற்கான உதாரணங்களை பட்டியலிடுங்கள்.
  5. இடர்ப்படும் இடங்களில் ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- **இந்தப்பாடப்பரப்பு தொடர்பாக உதவிபெறவேண்டிய இணையத்தளங்கள்**
  1. YouTube

  https://www.youtube.com/watch?v=AL7k0PIC-Ic
  https://www.youtube.com/watch?v=vu0-c2dVf2Y
  https://www.youtube.com/watch?v=bz_3PxR_cg8
  https://www.youtube.com/watch?v=uZm2oRGZzzY

  2. தமிழ் இணையப்பல்கலைக்கழகம்

  http://www.tamilvu.org/courses/degree/c031/c0311/html/c03112l3.htm

  3. இயல்புவழக்கு தகுதிவழக்கு

  https://www.srmist.edu.in/tamilperayam/tamilperayam/diplomadtt/Lessons/I_Year/dipl02/html/dip02003eap2.htm

  http://thirutnpsc.blogspot.com/2017/08/blog-post_21.html

  4. மேலதிக வாசிப்பு நூல்கள்
     தரம் 11 ஆசிரியஅறிவுரைப்பு வழிகாட்டி
     அடிப்படைத்தமிழ் இலக்கணம் - நு.்.மான்
     பாடநூல்
- **இந்தப்பாடத்தின் மூலம் பெறும் கற்றல்பேறுகள்**
  1. தரப்பட்ட பாடப்பரப்புகளில் வருகின்ற பயன்பாட்டு இலக்கணமாகிய இயல்புவழக்கு, தகுதி வழக்கு என்பவற்றை இனங்காண்பார்.
  2. அவற்றினை சுருக்கமாக எடுத்துக்கூறுவார்.
  3. பாடப்பரப்பில் அவை இடம்பெறும்போது அவற்றை இனங்கண்டு எழுதுவார்.
  4. மொழியின் தன்மை அறிந்து பிரயோகிப்பார்.
- **மதிப்பீட்டு முறைகள்**
  1. பின்வரும் சொற்களுள் இலக்கணப் போலிகளை இனங்கண்டு அடிக்கோடிடுக
     முன்றில், நுனிக்கிளை, புறநகர், ஐயர், அய்யர், அவ்வை, ஆடுதொடாப்பாலை, வாய்க்கடை, கடைவாய்
  2. சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறொரு வகையில் சொல்வது எவ்வாறு அழைக்கப்படும்?
  3. பின்வருவனவற்றுள் இலக்கணப்போலியாய் அமைந்த சொல்
     1. நகர்ப்புறம் 2 வாய்க்கடை 3 இல்முன் 4 வாயில்
  4. பின்வருவனவற்றுள் மரூஉ
     1. திரிகோணமலை 2 ஆடுதொடாப்பாலை 3 அருமந்த 4 திகதி
  5. ‘கொல்லைக்குப் போதல் என்று நாகரிமாக சொல்ல வைப்பது
     1. இடக்கரடக்கல் 2 மங்கலம் 3 மங்களம் 4 குழூஉக்குறி
  6. ‘நாகபாம்பை நல்ல பாம்பு என்று அழைப்பது

1. இடக்கரடக்கல் 2 மங்கலம் 3 மங்களம் 4 குழூஉக்குறி